


# “தேசிய அளவில் தி.மு.கவைத் தவிர்க்கவே முடியாது!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் இரண்டாம்அமர்வில் ‘தேசிய ஊடகங்களும், தி.மு.க.வும்’ என்னும் தலைப்பில், மூத்த பத்திரிகையாளர் திரு என்.ராம் அவர்கள் ஆற்றிய உரை :**



**என்.ராம்**
**மூத்த பத்திரிகையாளர்**

“காலையில் இருந்து அறிவுத்திருவிழாவில் நாடகம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆழமான விஷயங்களை ஆராய்ந்து, கருத்துகளை முன்வைக்கும் இயக்கம் திராவிட முன்னேற்றக்கழகம் என்பதை அறிவுத்திருவிழா நிரூபிக்கிறது.

‘தேசிய ஊடகங்களும் தி.மு.க.வும்’ என்று தலைப்பு கொடுத்திருக்கிறார்கள். தொடக்ககாலத்தில், தி.மு.க குறித்த செய்திகளைத் தேசிய ஊடகங்கள் வெளியிடுவதில்லை. ‘இந்து’ பத்திரிகையும்கூட விதிவிலக்கல்ல. ‘தி.மு.க குறித்த செய்திகளை வெளியிடாமல் இருந்தால்தான் தி.மு.க வளராது’ என்று பலபேர் நினைத்தார்கள்.

## தேசிய ஊடகங்கள்

ஆனால், 1965-இல் நடந்த மொழிப்போராட்டம் தி.மு.கவைப் பற்றி எழுத வைத்தது. தவிர்க்க முடியாமல் 1965-ஆம் ஆண்டு மொழிப்போராட்டம் குறித்த செய்திகளைத் தேசிய ஊடகங்கள் வெளியிட்டார்கள். ஆனால், அப்போதும்கூட ‘இந்தி எதிர்ப்புப் போராட்டம்’ என்றுதான் செய்தி வெளியிட்டார்கள். ‘எங்களுக்கு எந்த மொழியின் மீதும் வெறுப்பு கிடையாது. நாங்கள் இந்தி என்ற மொழியை எதிர்க்கவில்லை. இந்தித் திணிப்பைத்தான் எதிர்க்கிறோம்’ என்று எவ்வளவு விளக்கம் கொடுத்தாலும், தேசிய ஊடகங்கள் ‘இந்தி எதிர்ப்பு’ என்றுதான் செய்தி வெளியிட்டார்கள்.

1967-இல் தி.மு.க வெற்றி பெற்றபோது, பலராலும் நம்ப முடியவில்லை. குறிப்பாக, தேசிய ஊடகங்களுக்கு கடும் அதிர்ச்சி. தி.மு.க என்பது ஏதோ வளர்ந்துகொண்டிருக்கும் கட்சி என்றுதான் நினைத்தார்களே தவிர, அது மக்கள் ஆதரவுடன் ஆட்சியைப் பிடிக்கும் என்று அவர்கள் கருதவில்லை. அதுவரை தி.மு.கவைப் புறக்கணித்தவர்கள், இருட்டடிப்பு செய்தவர்கள், அதை உதிரிக்கட்சி என்று அலட்சியப்படுத்தியவர்களின் பார்வை மாறியது.

தி.மு.க தேசிய அரசியலிலும் செல்வாக்கு செலுத்தும் முக்கியமான கட்சியாக வளர்ந்தது. ‘இண்டிகேட் காங்கிரஸ்’, ‘சிண்டிகேட் காங்கிரஸ்’ என்று காங்கிரஸ் இரண்டாக உடைந்தபோது இந்திரா காந்தியின் கரத்தை வலுப்படுத்த முக்கியமான சக்தியாக விளங்கியது தி.மு.க. அதில் இருந்து ‘தி.மு.க என்பது வெறும் மாநிலக்கட்சி அல்ல, அது தேசிய அரசியலில் முக்கிய பாத்திரம் வகிக்கும் தவிர்க்க முடியாத கட்சி’ என்று தேசிய ஊடகங்கள் ஏற்றுக்கொண்டன என்பது என் புரிதல்.

## தவிர்க்க முடியவில்லை

அண்ணா மாபெரும் தலைவராக இருந்தாலும், தேசிய ஊடகங்கள் அவருக்கான சரியான இடத்தை அளிக்கவில்லை. ஆனால், கலைஞருக்குப் பின் தி.மு.க.வைத் தேசிய ஊடகங்களால் தவிர்க்க முடியவில்லை. அப்போது தேசிய ஊடகங்களின் நிலைப்பாட்டில், அணுகுமுறையில் மாற்றம் வந்தது. கலைஞர் அதிகம் படித்தவரில்லை என்றாலும் அறிவில், எழுத்து திறமையில், பேச்சுத்திறமையில் சிறந்தவர். அவர் எதைப் பேசினாலும், எழுதினாலும் ஊடகங்களுக்கு எழுதுவதற்கு அதில் செய்தியிருக்கும். கலைஞரின் பேச்சும் எழுத்தும் அவ்வளவு சுவாரஸ்யமாகவும் கவர்ந்திழுக்கும் தன்மையும் கொண்டிருக்கும்.

கலைஞரைப் பற்றி பல விஷயங்கள் சொல்லலாம். எனக்கும் அவருடன் நிறைய அனுபவங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஊடகவியலாளர்கள் எளிதில் அணுகக்கூடிய தலைவராக கலைஞர் இருந்தார். நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நிறைய தலைவர்கள் ஊடகங்களுக்கு எட்டாக்கனியாக இருந்தார்கள். அவர்களைப் பத்திரிகையாளர்களால் எளிதில் அணுக முடியாது. எதைக் குறித்தும் அவர்களிடம் கருத்து பெற முடியாது. நேர்காணல் அளிக்க மாட்டார்கள். பத்திரிகையாளர் சந்திப்பு நடத்த மாட்டார்கள். ஆனால், கலைஞர் இதற்கு முற்றிலும் நேர்மாறானவர்.

## மனம் விட்டுப் பேசுவார்

அண்ணா அறிவாலயத்துக்குச் சென்றால், கலைஞரைச் சந்திக்கலாம். தொடர்ச்சியாக ஏதேனும் செய்தி தந்துகொண்டேயிருப்பார். நான் ‘இந்து’ நாளிதழின் ஆசிரியராக இருக்கும்போது காலை ஆறு மணிக்கு முன்பே போன் வந்துவிடும். கலைஞரை, தி.மு.கவை விமர்சிக்கும் செய்திகள் வெளியானால் உடனே போன் செய்து பேசுவார். நாம் நேரில் போய் நம்முடைய நிலைப்பாட்டை விளக்கலாம். அவரும் அவருடைய கருத்தைச் சொல்லுவார். விமர்சனத்தின் மீது தன்னுடைய நிலைப்பாட்டைச் சொல்வார். செய்திகளைப் பற்றி மட்டுமல்ல, எதைப் பற்றி வேண்டுமானாலும் கலைஞரிடம் பேசலாம். உலக வரலாறு முதல் சமகால விஷயங்கள் வரை பேசலாம். இலங்கைப் பிரச்சினையைப் பற்றி பலமுறை அவரிடம் பேசியிருக்கிறேன். தேசியப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பார். கலைஞரே ஒரு எழுத்தாளர், ஒரு பத்திரிகையாளர் என்பதால், பத்திரிகையாளர்களிடம் மனம் விட்டுப் பேசுவார்.

கலைஞர் தலைமையின் காரணமாகத்தான் தி.மு.கவுக்குத் தேசிய அளவில் ஒரு முக்கியத்துவம் கிடைத்தது. ஆனால், ஒரு விஷயத்தில் கலைஞர் உறுதியாக இருந்தார். இந்தியாவில் பலபேர் பிரதமராகும் ஆசையில் இருந்தார்கள். நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஒருவருக்குக்கூட பிரதமர் ஆகும் விருப்பமிருந்தது. ஆனால், கலைஞருக்கு ஒருபோதும் பிரதமர் ஆகும் விருப்பம் இருந்ததில்லை. ‘நாங்கள் பிரதமர்களைத் தீர்மானிப்போம். தேசிய அரசியலில் பங்கு வகுப்போம். ஆனால், எங்கள் எல்லை என்பது தமிழ்நாடு அரசியல்தான்’ என்பதில் தி.மு.க தெளிவாக இருந்தது.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது பலவிதமான கருத்துக்கணிப்புகள் வந்தன. தி.மு.க கூட்டணிதான் வெல்லும் என்று அனைவருக்கும் தெரியும். ஆனால், புதுச்சேரியையும் சேர்த்து தி.மு.க கூட்டணி 40 தொகுதிகளை வெல்லும் என்று பலரும் எதிர்பார்க்கவில்லை. பா.ஜ.க அரசுக்குத் தனிப்பெரும்பான்மை கிடைக்காமல் போனதற்கு, தி.மு.க கூட்டணிக்கு கிடைத்த வெற்றியும் முக்கியமான காரணம்.

## மும்மொழிக்கொள்கை

‘இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் யார்?’ என்று கேட்டால் ‘ஸ்டாலின்’ என்று சொல்கிறார் தேஜஸ்வி யாதவ். காரணம், எந்த நிலைப்பாடு எடுப்பதாக இருந்தாலும், தி.மு.க தன் கொள்கையின் அடிப்படையில் தெளிவான நிலைப்பாடு எடுக்கிறது. இந்தித் திணிப்பு எதிர்ப்பு, நீட் எதிர்ப்பு என்று எதுவாக இருந்தாலும் அதற்கான காரணங்களை விளக்கி, எதிர்ப்பை முன்வைக்கிறது. தேசிய கல்விக் கொள்கையை ஏன் எதிர்க்கிறோம் என்றால், அது இந்தியைத் திணிக்கிறது என்று தெளிவான காரணத்தை முன்வைத்தது தி.மு.க. ‘இல்லையில்லை மும்மொழிக்கொள்கை என்றால், இந்தி என்று அர்த்தமில்லை. எந்த ஒரு மாநிலத்தின் மொழியையும் படிக்கலாம்’ என்கிறார்கள். ஆனால், ஒருவர் வங்க மொழியைப் படிக்கவேண்டும் என்றால், அதற்கான ஏற்பாடுகள் இருக்கிறதா? இந்தியைத் திணிப்பதற்கான முயற்சிதான் இது.

இந்தியாவில் இருக்கும் மோசமான ஆளுநர்களிலேயே முதன்மையானவர் தமிழ்நாட்டில் இருக்கும் ஆளுநர்தான். இதை நான் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆளுநர்களுக்கு எதிராக, எத்தனையோ எதிர்க்கட்சிகள் வழக்கு தொடுத்தார்கள். ஆனால், சிறந்த தீர்ப்பைப் பெற்றது தி.மு.க.தான். ஒருபுறம் கொள்கைரீதியான எதிர்ப்புகளை முன்வைக்கும் தி.மு.க இன்னொருபுறம் மக்கள்நலத் திட்டங்களையும் மேற்கொள்கிறது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் அதிகரித்திருக்கிறது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லை.

நம் துணை முதலமைச்சரின் விளையாட்டு மேம்பாட்டுத்துறையை எடுத்துக்கொள்வோம். இந்தியாவில் 85 செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ் இருக்கிறார்கள். அதில் 26 கிராண்ட் மாஸ்டர்ஸ் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அதாவது 33% தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாடு ஒரு முக்கியமான விளையாட்டு மாநிலமாக உருவாகி வருகிறது.

ஆங்கில மற்றும் இந்தி தேசிய ஊடகங்கள் பெரும்பாலும் மோடி அரசின் பிரச்சாரத்தை மேற்கொள்ளும் ஊடகங்களாகத்தான் இருக்கிறார்கள். அதைத்தாண்டி மோடி அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே தரத்தில்தான் இருக்கின்றன. மோடி அரசை எதிர்ப்பதால் தேசிய ஊடகங்கள் தி.மு.கவைத் தவிர்க்கப் பார்க்கின்றன. ஆனால், தி.மு.க அரசின் சாதனைகள் அவர்களைத் தவிர்க்க முடியாதவர்கள் ஆக்கியிருக்கின்றன.

## ரூஸ்வெல்ட் சொன்ன வார்த்தைகள்

‘SPEAK SOFTLY AND CARRY A BIG STICK AND YOU WILL GO FAR’ என்று அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் கூறினார். ‘மென்மையாகப் பேசுங்கள். ஆனால் அதேநேரத்தில் எதை எதிர்க்க வேண்டுமோ, அதன்மீது உறுதியாக உங்கள் எதிர்ப்பை முன்வையுங்கள்’ என்பது அதன் அர்த்தம். நம் முதலமைச்சரையும் துணைமுதலமைச்சரையும் பார்க்கும்போது ரூஸ்வெல்ட் சொன்ன வார்த்தைகள்தான் நினைவுக்கு வருகின்றன. இருவருமே எதையுமே மிகைப்படுத்திப் பேசுவதில்லை, மென்மையாகத்தான் பேசுகிறார்கள். ஆனால், தங்கள் எதிர்ப்பை உறுதியாக முன்வைக்கிறார்கள்.

இருவண்ணக்கொடிக்கு வயது 75 - வாழ்த்துக்கள்”

## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**அறிவுத்திருவிழா குறித்து விக்னேஷ் ஆனந்த் என்னும் பதிவர் X தளத்தில் எழுதிய பதிவில் இருந்து...**

’கொள்கை இல்லாத கட்சி ஓடு இல்லாத வீடு போன்றதாகும். - பேரறிஞர் அண்ணா. நம் நாடு (24-8-1961)

கழக இளைஞர் அணிச் செயலாளர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நிறைவுவிழா உரை அருமை. வர இருக்கும் ஒவ்வொரு ஆண்டும் இனி அறிவுத் திருவிழா நடக்க இருக்கின்றது. செப்டம்பர் மாதத்தை எப்படி அண்ணா, பெரியார், கழகம் பிறந்த நாளை முப்பெரும் விழாவாகவும், திராவிட மாதமும் கொண்டாடுகிறோமோ... அதே போல நவம்பர் மாதம் இந்த அறிவுத் திருவிழாவைக் கொண்டாட லாம். பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் பிறந்த மாதம் நவம்பர் மாதம். நவம்பர் மாதத்தில் தொடங்கி அண்ணல் அம்பேத்கர் மறைந்த டிசம்பர் 6 தேதி வரை நடத்தலாம்.

